# கொழும்பு, ஐக்கிய அமெரிக்க தூதகராலயத்தினால் நேர்முக தேர்விலிருந்து விலக்கலிக்கப்பட்ட நிகழ்ச்சி அறிமுகப்படுத்தபடுகின்றது (IWP)

APRIL 11 2016: இன்று முதல் ஐக்கிய அமெரிக்க தூதகராலயத்தினால் குறிப்பிட்டசில தகுதிகள் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு வீசாவிற்கான "நேர்முக தேர்வு விலக்கலிக்கப்பட்ட நிகழ்ச்சி "அறிமுகப்படுத்தபடுகின்றது. இந்நிகழ்ச்சியின் மூலம் குறிப்பிட்டசில தகுதிகள் பெற்ற விண்ணப்பதாரிகள் நேர்முக தேர்விற்கு தோன்றாமல் தமது வீசாவை புதுபிக்கலாம். இந்த IWP நிகழ்ச்சி ஆனது ஏற்கனவே ஐக்கிய அமெரிக்கவிற்க்கு பயணித்த, மற்றும் 2008 ஆம் ஆண்டு சித்திரை மாதத்திற்கு பிறகு B1/B2 சுற்றுலா வீசா பெற்றவர்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். முதன் முறையாக வீசாவிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு இந்நிகழ்ச்சி மூலம் விண்ணப்பிக்க முடியாது. இலங்கையில் மற்றும் மாலை தீவில் வதியும் விண்ணப்பதாரிகளிடம் இருந்து இந்நிகழ்ச்சிக்கு விண்ணப்பங்கள் ஏற்று கொள்ளப்படும்.

"இந்நிகழ்ச்சியானது இலங்கையில் மற்றும் மாலை தீவில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கான வீசா வழங்கலை துரிதப்படுத்துவதுடன் விண்ணப்பதாரிகளுக்கு சிறந்த சேவையை வழங்குகின்றது." என்று இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்க தூதகர் **Atul Keshap** தெரிவித்தார். "இச்சேவை ஐக்கிய அமெரிக்கவிற்கான பயணத்தை இலகுப்படுத்துகின்றது"

இணையப்படிவமான DS-160 யை பூர்த்தி செய்து வீசா கட்டணத்தை செலுத்திய அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்த இந்நிகழ்ச்சிக்கு தெரிவு செய்யப்பட கருத்தில் கொள்ளப்படுவர். ஏற்கனவே தாம் மேற்கொண்ட பயணங்களுக்கு அமைய IWP நிகழ்ச்சிக்கு தகுதி பெறுவர். இந்நிகழ்ச்சிக்கு தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரிகளை தமது நேர்முக தேர்விற்கான நேரத்தை பெறும்படி எமது இணையதள நிகழ்ச்சி அறிவுறுத்தும்.

IWP நிகழ்ச்சியிற்கு தகுதி பெற்ற காரணத்திதால் கண்டிப்பாக வீசா வழங்கப்படும் என கூற முடியாது. வீசா கிடைக்குமாயின் ஆவணங்களை சமர்பித்த இரு வாரங்களில் பெற்று கொள்ள முடியும். ஏற்கனவே நேர்முக தேர்விற்கு திகதி பெற்றவர்கள் இந்த IWP நிகழ்ச்சியில் பங்கு பெற முடியாது. இந்நிகழ்ச்சி பற்றிய மேலதிக விபரங்களுக்கும் மற்றைய வீசா சம்மந்தமான விபரங்களுக்கும் எமது இணையதளத்தை பார்க்கவும் srilanka.usembassy .gov